பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**19 01 2026** **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபரின் வருகை இந்தியா உடனான நட்புறவை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நடப்பாண்டில் இந்தியாவின் எரிசக்தி துறை, வரலாற்றுச் சிறப்புமிக்க வளர்ச்சியை அடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. கிரின்லாந்துக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளுக்கு அதிக வரி விதிக்கப்படும் என்ற அமெரிக்க அதிபரின் அச்சுறுத்தல் தவறானது என்று பிரிட்டன் பிரதமர் திரு Keir Starmer தெரிவித்துள்ளார்.

4. ஸ்பெயினில் ரயில்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 39 பயணிகள் உயிரிழந்தனர்.

5. ஐ சி சி ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் விராட் கோலி தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

-

- இனி விரிவான செய்திகள் –

< < < < < < < < > > > > > > >

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபரின் இந்தியா வருகை இருநாடுகளுக்கும் இடையேயான நட்புறவை வலுப்படுத்தும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் திரு. Sheikh Mohamed Bin Zayed Al Nahyan-ன் வருகை இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முன்னதாக, புதுதில்லி வந்த ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபரை, விமான நிலையத்திற்கு நேரில் சென்று பிரதமர் திரு நரேந்திர மோடி வரவேற்றார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபராக பொறுப்பேற்ற பின்னர் திரு. Al Nahyan, மூன்றாவது முறையாக இந்தியா வந்துள்ளார்.

இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே பரஸ்பர நலன்கள் சார்ந்த உலகளாவிய மற்றும் மண்டல அளவிலான பிரச்சினைகள் குறித்து இரு தலைவர்களும் சந்தித்து ஆலோசனை மேற்கொள்ளவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

கடலோர காவல்படையின் மேற்கு பிரிவு கமாண்டராக கூடுதல் தலைமை இயக்குனர் எம் வி பதக் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்திய கடலோர காவல்படையில் இவர், கடந்த 1989-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தார்.

கடலோர காவல்படையின் அனைத்து வகையான கப்பல்களிலும் பணியாற்றிய அனுபவம் பதக்கிற்கு உள்ளது.

<<<<<<<>>>>>>>

பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், உத்தரபிரதேசத்தில் கடந்த ஒன்பதாண்டுகளில் 62 லட்சம் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ், புதிதாக கட்டப்பட்ட 2 லட்சத்து 9 ஆயிரம் வீடுகளை, லக்னோவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் பயனாளிகளுக்கு வழங்கிப் பேசினார்.

நகர்ப்புற மேம்பாட்டுக்கான வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஏழை மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளதாக திரு. யோகி ஆதித்யநாத் கூறினார்.

<<<<<<<>>>>>>>

பிஜேபி தேசிய தலைவராக திரு நிதின் நபின் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

இப்பதவிக்கான வேட்புமனு தாக்கல் புதுதில்லியில் இன்று தொடங்கி நிறைவடைந்த நிலையில், திரு நிதின் நபினை தவிர வேறு யாரும் போட்டியிடவில்லை.

இதனால் அவர் பிஜேபி தலைவராக போட்டியின்றி தேர்வாகிறார்.

45 வயதான இளம் தலைவர் திரு நிதின் நபின் இப்பதவிக்கு பொறுப்பேற்க இருப்பது பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

நடப்பாண்டில் இந்தியாவின் எரிசக்தி துறை வரலாற்றுச் சிறப்புமிக்க வளர்ச்சியை அடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மின் உற்பத்தி, மின் பகிர்மானம் மற்றும் வழங்கல் போன்றவை, சென்ற ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சியை எட்டியுள்ளதாக எரிசக்தி துறை தெரிவித்துள்ளது.

நடப்பாண்டு தொடக்கத்தில், சுமார் 242 ஜிகாவாட் மின் தேவை இருந்த நிலை மாறி, தற்போது நாடுதழுவிய அளவில் மின்சார தட்டுப்பாடு பூஜ்யம் புள்ளி பூஜ்யம் மூன்று சதவீதமாக

குறைந்துள்ளது என்றும் எரிசக்தி அமைச்சகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<<<<>>>>>>>

கரூர் கூட்டநெரிசல் சம்பவம் தொடர்பான வழக்கில் புதுதில்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்தில் தவெக தலைவர் திரு விஜய் இன்று மீண்டும் ஆஜரானார்.

இதே வழக்கு தொடர்பாக கடந்த வாரத்தில் அவர் சிபிஐ அதிகாரிகள் முன்னிலையில் ஆஜராகியிருந்தார்.

கடந்த செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதி கரூரில் விஜய் பங்கேற்ற பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது.

<<<<<<<<>>>>>>>

கிரின்லாந்துக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளுக்கு அதிக இறக்குமதி வரி விதிக்கப்படும் என்ற அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்பின் அச்சுறுத்தல் தவறானது என்று பிரிட்டன் பிரதமர் திரு Keir Starmer தெரிவித்துள்ளார்.

லண்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திரு ட்ரம்பின் வர்த்தக போரை எந்தவொரு நாடும் விரும்பவில்லை என்று கூறினார்.

ஆர்டிக் தீவின் எதிர்காலத்தை முடிவு செய்யக்கூடிய கிரின்லாந்து மற்றும் டென்மார்க் நாடுகளின் அடிப்படை உரிமைகளை பிரிட்டன் ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பாவில் உள்ள இதர நாடுகளுடனும், நேட்டோ அமைப்புடனும் இணைந்து செயலாற்ற பிரிட்டன் தயாராக உள்ளதாகவும் திரு Keir Starmer கூறினார்.

<<<<<<<>>>>>>>

சிரியா அரசு படைகள் - Kurdish தலைமையிலான சிரிய விடுதலைப் படையினர் இடையே உடனடி சண்டை நிறுத்தத்தை அமல்படுத்த ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

சிரியா தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் கிழக்குப் பகுதி மாகாணங்களில் முழுஅளவிலான ராணுவ மற்றும் நிர்வாக கட்டுப்பாட்டை ஏற்படுத்த இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

கர்திஷ் படையினர் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் அரசு படையினர் அதிரடி தாக்குதல் நடத்திய நிலையில், தற்போது சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு, முன்னாள் அதிபர் திரு. Bashar Al Assad அரசு, ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்பட்ட பின்னர், சிரியாவில் நிகழ்ந்து வரும் ராணுவ மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இந்த சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

< < < < < < < > > > > > > >

ஸ்பெயின் நாட்டில் அதிவேக ரயில்கள் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 39 பயணிகள் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர்.

Malaga என்ற இடத்திலிருந்து Madrid நோக்கி சென்று கொண்டிருந்த விரைவு ரயிலும், எதிர் திசையில் மேட்ரிட்-டிலிருந்து Huelva-வுக்கு வந்த விரைவு ரயிலும் Adamuz என்ற இடத்தில் மோதியதில் விபத்து நேரிட்டதாக அந்நாட்டு பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

விபத்தை தொடர்ந்து உடனடியாக மீட்புக் குழுவினர் விரைந்து சென்று, மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

ரயில்கள் மோதிய வேகத்தில் நூற்றுக்கணக்கான பயணிகள் தூக்கி வீசப்பட்டதாகவும், காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டதாகவும் ஸ்பெயின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த 2013ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஸ்பெயினில் நேரிட்ட மிக மோசமான ரயில் விபத்து இது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்து குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர்,

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைந்து குணமடைய தாம் விரும்புவதாகவும் அமைச்சர் அதில் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

நேபாளத்தில் போதிய எரிசக்தி உற்பத்தி இல்லாமல், வளர்ச்சி சாத்தியமாகாது என்று அந்நாட்டு துணை அதிபர் திரு. Ramsahay Prasad Yadav தெரிவித்துள்ளார்.

காத்மாண்டுவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நேபாளத்தின் தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார சுதந்திரத்திற்கு, எரிசக்தி உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டியது அவசியம் என்று கூறினார்.

குறைந்த கட்டணத்தில் தேவைக்கேற்ப எரிசக்தி கிடைப்பதன் மூலம், விரைவான வளர்ச்சியை உறுதி செய்ய முடியும் என்றும் திரு. Ramsahay Prasad Yadav தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

தென்னாப்பிரிக்காவின் Gauteng மாகாணத்தில் பள்ளிப் பேருந்து மீது, லாரி மோதிய விபத்தில் 12 மாணவர்கள் உயிரிழந்தனர்.

பள்ளி மாணவர்களை ஏற்றிச் சென்ற மினி பேருந்தின் ஓட்டுநர், முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முயன்ற போது, எதிரே வந்த லாரியுடன் மோதி விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

அந்த பேருந்தில் தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பயணம் செய்த நிலையில், 11 பேர் சம்பவ இடத்திலும், ஒருவர் மருத்துவமனையிலும் உயிரிழந்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் விராட் கோலி 785 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

784 புள்ளிகளுடன் நியூசிலாந்தின் Daryl Mitchell இரண்டாவது இடத்திலும், இந்தியாவின் ரோஹித் சர்மா 775 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

---------

நெதர்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் இரண்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி முதலிடத்தில் உள்ளார்.

---------

**மெக்சிகோ சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Srishti Kiran பட்டம் வென்றார்.**

**மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 6-4, 6-4 என்ற செட் கணக்கில் மெக்சிகோவின் Tamara Herman -ஐ வென்றார்.**

----------------

**பக்ரைன் ஓபன் டென்னிஸ் போட்டியின் இரண்டாவது தகுதி சுற்று ஆட்டத்திற்கு இந்தியாவின் அங்கிதா ரெய்னா முன்னேறியுள்ளார்.**

----------------

**கபடி சாம்பியன் லீக் போட்டி முதல் முறையாக வரும் 25-ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 7-ஆம் தேதிவரை ஹரியானாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

-----------------

**உலக விளையாட்டு விருதுகள் மெட்ரிட்டில் ஏப்ரல் 20-ஆம் தேதி நடைபெறும் விழாவில் வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது**

-----------

**மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பெங்களூரு அணி முதலில் பேட் செய்ய உள்ளது.**

வதோதராவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில், டாஸ் வென்ற குஜராத் அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

**<<<<<<END>>>>>>**